சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு கழக பொருளாளர், டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், ஆகியோர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 1000 நபர்களுக்கு பிரியாணி வாங்கினார்கள். இதில் நொளம்பூர் வே.ராஜன், அ.ம.துரைவீரமணி, எஸ். அருணாச்சலம், .செல்வகுமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆ. கிருஷ்ணசாமி ஏற்பாட்டில் - பூவிருந்தவல்லி மாநில ஆதிதிராவிடர் அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் ! நல உதவிகள் - கழக நிர்வாகிகளுக்கு பொற்கிழி !

மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினார்!

திருவள்ளூர்ஜூன் 04

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி சார்பில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள், அன்னதானம் மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மாநில ஆதிதிராவிடர் அணி செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு அன்னதானம், பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் ஆவடி பகுதியில் உள்ள கழக அலுவலகத்தில் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

ஆவடி தெற்கு பகுதி 42வது வார்டில் பகுதி செயலாளர் ஜி. ராஜேந்திரன் தலைமையிலும், வட்ட செயலாளர் சத்யா ரவி ஏற்பாட்டிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன், பள்ளி மாணவமாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பூந்தமல்லி நகர திமுக சார்பில் நகர கழக செயலாளர் ஜி.ஆர். திருமலை ஏற்பாட்டில் பூந்தமல்லி பஜார் பகுதியில் பொதுமக்களுக்கு பிரியாணி மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன.

பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச. கமலேஷ் ஏற்பாட்டில் பாரிவாக்கம் மற்றும் சென்னீர்குப்பம் பகுதிகளில் உள்ள டாக்டர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது. பூந்தமல்லி நகரம் 18வது வார்டு சார்பில் வட்ட செயலாளர் ஜெ. சுதாகர் ஏற்பாட்டில் அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மேலும், திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல் ஏற்பாட்டிலும், நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி முன்னிலையிலும் கால்பந்து போட்டி நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு. நாசர் இறுதிப் போட்டியை தொடங்கி வைத்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு உணவும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளில் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளான கே.ஜெ. ரமேஷ், சி. ஜெரால்டு, எம். முத்தமிழ்ச் செல்வன், காஞ்சனா சுதாகர், சன் பிரகாஷ், பேபி சேகர், பொன் விஜயன், ஜி. நாராயண பிரசாத், க. ஸ்ரீதர், விமல் ஆனந்த், வி. தணிகாசலம், க. பரிமளழகன் உள்ளிட்டோர் மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.டி. ஆர்.நாகராஜ் தலைமையில்

அம்பத்தூர் கிழக்கு பகுதி சார்பில் புத்தெழுச்சிநாள் மாபெரும் கருத்தரங்கம் !

ஆ.இராசா எம்.பி–வழக்கறிஞர் அருள்மொழி– தமிழன் பிரசன்னா புகழுரை!

சென்னை ஜூன்:4

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொண்டாடும் புத்தெழுச்சிநாள் விழா அம்பத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க.சார்பில் மாபெரும் புகழரங்கம், தியாகத்தால் உயர்ந்த ஆகாயம்! திராவிட இனத்தின் பூபாலம்! நிகழ்ச்சி இன்று (4.6 2026 வியாழக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு அம்பத்தூர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எம்.டி. ஆர். நாகராஜ் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் கழக மக்களவை குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி எம்.சி, தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால், தலைமை பொதுக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி. ரமேஷ் என்கிற நீல கண்டன், மாவட்ட அமைப்பாளர் எல்.பி. எஃப்.மோகன், மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.சாந்தகுமாரி, உஷா நாகராஜ் எம். சி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ. பாலமுருகன், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் கு. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட மீனவர்கள் அமைப்பாளர் து.ஆயிரம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜி.வி. நாகவள்ளி,

அம்பத்தூர் கிழக்கு பகுதி நிர்வாகிகள்; து. ஜெகநாதன்,பி. ஆர். இளங்கோவன், பா. பொற்செழியன்,ரா. லட்சுமிரங்கசாமி,மேனாம்பேடு இ.ராமு.

அம்பத்தூர் கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள்:மு. சண்முகம்,ஆர். சுந்தர்ராஜ்,சீ. லோகநாதன்,சு. மோகன் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட பிரதிநிதிகள் கே. செல்வம்,கோ. முத்துக்குமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல்,ச. கோதண்டன்,கோ. இன்பசேகரன் இ. நடராஜன்,ஆர் விமலா ஜெ.ஜயப்பன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இம்மாபெரும் நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி, தீராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி,கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மேயர் பிரியா ராஜன், அம்பத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் சன். முனியாண்டி ஆகியோர் புகழுரை வழங்குகின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் மு. விஜயகுமார், த.வ.லால் ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ – முன்னிலை! எ.நாகராசன் எம்.சி. தலைமை!

கொளத்தூர் மேற்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் மாபெரும் புகழரங்கம்!

நடிகர் சத்யராஜ் – நடிகர் பொன்வண்ணன், பௌசியா பானு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, வாழ்த்துரை!

சென்னை.ஜூன்.4-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கொளத்தூர் மேற்கு பகுதியில் பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் - புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி-3", "தமிழாய்ந்த பேரறிவுத் தலைவர்! கலையாவும் நன்கறிந்த கலைஞர்!! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 05/06/2026. வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அகரம்,பெரவள்ளூர் சதுக்கத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர் எ. நாகராசன்.எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம் எல் ஏ, ஐ சி எப் வ. முரளிதரன், சி.மகேஷ்குமார், கே. சந்துரு, சரிதா மகேஷ்குமார், தேவஜவகர் .எஸ். பன்னீர் செல்வம், வானவில் விஜய், எஸ். தனசேகர், துரை கண்ணன், ஆர் எஸ் சித்திக், ம. அசோக்ககுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா. தயாளன், எம்.சாக்ரடீஸ், வி. வெங்கடேசன், ஆர்.காஞ்சனா பி.சூரி, எம்.டி. தமிழ்செல்வன், செ.முருகன், என். சவுந்தர்ராஜன், என் .பவுல்ராஜ், என். ராமச்சந்திரன், எம். தாவுத் பீ, எம் சி .சி.ஸ்ரீதனி எம் சி.யோகபிரியா தனசேகர் எம் சி. பி.அமுதா பொன்னிவளவன் எம் சி. ஆரோக்கியதாஸ், எம். நாகராஜ், அ.கன்னியப்பன், டி. ஏ. ராஜன் ஆர். மோகனசுந்தரம், எஸ். சம்பத்குமார், ஜெ. சரவணன், என். ரவிச்சந்திரன், ஆர். சொக்கலிங்கம், எஸ். நாகராஜன், ஏ .எம்.ராஜசேகர் ஆர் .ஜே. வெங்கடரமண மூர்த்தி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் புரட்சித் தமிழன் திரு.சத்யராஜ் நடிகர் திரு. பொன்வண்ணன், பனைக்குளம் பௌசியா பானு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக்கூட்டத்தில்.மேயர் பிரியா ராஜன், இரா. கிரிராஜன் ப. ரங்கநாதன் இரா விடுதலை கே.எஸ்.இரவிச்சந்திரன் . ஜோசப் சாமுவேல்,பி.கே.மூர்த்தி. சங்கரிநாராயணன் Ex.MLA தமிழன்பிரசன்னா, எஸ்.மணி முடிExMLA, கவிஞர் நன்மாறன் எம். விஜயகுமார், கே எஸ் எம் நாதன், என் பி எம் ஷேக் அப்துல்லா, வே. உமாகாந்த், பரிதிஇளம்சுருதி MC ஆர்.வரதன் மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன்,ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன்,இசட்.ஆசாத், மண்டல குழு தலைவர்கள்: கூ. பீ.ஜெயின் .பி. ஸ்ரீ ராமுலு. பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு ஜ சொ.வேலு வி.சுதாகர் எம்.சாமி கண்ணு செ.தமிழ்வேந்தன் எஸ். இராஜசேகர் எஸ்.முரளி. டீஎஸ்பிராஜ கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் எம் .ஜெ. சி பாபு. பி.அதிபதி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்த நாளை முன்னிட்டு குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பெரியபணிச்சேரி ஊராட்சியில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து பொதுமக்களுக்கு காலை உணவை வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நான் வளர்த்த - என்னை வளர்த்த அன்பகம் - புதுப்பொலிவுடன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூன்.4–

நான் வளர்த்த, என்னை வளர்த்த அன்பகம் புதுப் பொலிவுடன் திகழ்கிறது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்த நாளை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் தலைமையகமான அன்பகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 75 அடி உயர கம்பத்தில் கழகத்தின் இருவண்ணக் கொடியை கழகத் தலைவர் – முத்துவேல்

கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்து தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா –

முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளைத் திறந்துவைத்து, அன்பகத்தின் முதல் தளத்தில் புதுப்பிக்கப்பட்ட அலுவலகத்தையும் திறந்துவைத்து, இளைஞர் அணி மேற் கொண்டுவரும் ஆக்கப்பூர வமான பணிகளைப் பார்வையிட்டார். ஏற்கெனவே புதுப்பிக்கப்பட்ட இரண்டாவது தளத்திற்கும் சென்று, அங்கு நடை பெறும் பணிகளையும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.

இதைத் தொடர்ந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவு வருமாறு:

நான் வளர்ந்த – என்னை வளர்த்த அன்பகம் புதுப்பொலிவுடன்

@dmk_youthwing புதுவேகத்துடன் – புதிய இளைஞர்களைக் கொள்கையோடு வளர்த்து, வெற்றியை நமதாக்கட்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சங்க பொதுச் செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில்

அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா!

1000 பேருக்கு உணவு! கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கினர்!

சென்னை, ஜூன்.4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் அதன் பொதுச்செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில் 3.6.2026 அன்று காலை சிறப்பாக கொடியேற்றி கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 1000 நபர்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கப்பட்டது.

அரசு ஊழியர்கள் வாழ்வில் ஒளியேற்றிய பல எண்ணற்ற நலத்திட்டங்களை வழங்கிய 'முத்தமிழறிஞர் கலைஞர்' அவர்களின் நினைவினை என்றும் நெஞ்சில் சுமக்கும் அரசு ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரம் அவர்களின் பிறந்த தின விழாவில் கீழ்க்கண்ட அரசு அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொருளாளர் ஆ.ஜெய் சங்கர், இணைச் செயலாளர் என்.நாராயணன், துணைப் பொருளாளர் ஆர்.நாகராஜன், சட்ட ஆலோசகர் எஸ்.பி.எஸ்.புத்தன், அலுவலக செயலாளர் பி.சுகுமார், சங்க ஆலோசகர் ஹரி, துணைத் தலைவர் ஏ.ரவிச்சந்திரன், என்.பெருமாள், பி.எஸ்.வெங்கடேசன், இ.மஞ்சுளா, என். ஸ்டான்லி, பி.சீனிவாசன், வி.ராணி, வி.லோகநாதன், ஜெ.துரைபாபு, ஜெ.பாண்டியன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், டி.பாலகிருஷ்ணன், பி.புனிதன், டி.ரஞ்சித் குமார், எம். சங்கர், கே.ஜெயராமன், டி.பி.லதா, ஜெ.ரிச்சர்ட் சாமுவேல், சமீர், எஸ்.காளிதாசன், பி.நடராஜன், எஸ். வெங்கடேசன், ஐ.ஷீலா, என்.ரவிச்சந்திரன், எல். லீலாவதி, எச்.எம்.முகம்மது அப்துல் காதர், ஆர்.கமலநாதன், இ.ராஜன், டி.சுரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் – புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி-1, "பன்முக ஆற்றலின் நாயகன் "பலர் வாழ உழைத்த சூரியன்எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் வட்டக் கழகச் செயலாளர் டி. சதீஷ்குமார் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக உயர்நிலை செயல்திட்ட உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. சொல்வேந்தர் சுகிசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்பி, மக்கள் நீதி மய்யம் இளைஞரணி செயலாளர் கவிஞர். சினேகன் ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எஸ் ராஜசேகர், வே.வாசு, கூ.பீ.ஜெயின், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். இறுதியில் வட்ட கழக செயலாளர் வே.பா. பிரபாகரன் நன்றி கூறினார்.